**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம். கமுதி**

**முன்னிலை : திருமதி. G. தங்க கார்த்திகா., B.Sc., B.L.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர். கமுதி**

**2026 ஆம் வருடம் மே மாதம் 26 ம் நாள் செவ்வாய்க்கிழமை**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 116/2021**
**CNR. NO.TNRM070004692021**

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | கமுதி காவல்நிலையம் குற்ற எண் – 263/2021 |
| எதிரியின் விபரம் | | |
| 2. | பெயர் | சேத்தூர் முத்தையா |
| 3. | த/பெ. | ராஜ் |
| 4. | தொழில் | -- |
| 5. | முகவரி | அகத்தாரிருப்பு, அபிராமம் (இருப்பு)மதுரை முக்கு ரோடு, சிவகங்கை |
| 6. | வயது | 47/21 |
| 7. | சம்பவ நாள் | 22-04-2021 ம் தேதி 16.45 மணி |
| 8. | புகார் தேதி | 22-04-2021 ம் தேதி 18.00 மணி |
| 9. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | 09-06-2021(Station bail) |
| 10. | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | 09-06-2021(Station bail) |
| 11. | கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | 19-08-2021 |
| 12. | விசாரணை துவங்கப்பட்ட நாள் | 18-05-2026 |
| 13. | விசாரணை முடிவுற்ற நாள் | 25-05-2026 |



THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.26 19:19:02 +0530

| | | |
|---|---|---|
| 14. | சாட்டப்பட்ட குற்றச்சாட்டு | எதிரி மீது இதச பிரிவுகள் 279, 337, 304(A) ன் கீழ் |
| | வனையப்பட்ட குற்றச்சாட்டு | -- |
| 15. | காலதாமதத்திற்கான காரணம் | சாட்சிகள் உரிய காலத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை |
| 16. | அரசு தரப்பு சாட்சிகள் | சாட்சிகள் / முதல் விசாரணை / குறுக்கு விசாரணை<br>அ.சா.1 / 18.05.2026 / 18.05.2026<br>அ.சா.2 / 18.05.2026 / 18.05.2026<br>அ.சா.3 / 18.05.2026 / 18.05.2026<br>அ.சா.4 / 25.05.2026 / 25.05.2026 |
| 17. | எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)/351 (1) (b) B.N.S.S Act ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள் | 26-05-2026 |
| 18. | எதிரி தரப்பு சாட்சிகள் | இல்லை |
| 19. | எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 320 Cr.P.C/359 BNSS பிரிவின் படியான மனுக்கள் | இல்லை |
| 20. | எதிரி/குற்றமுறையிட்டாளார் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 311 Cr.P.C/348 BNSS பிரிவின் படியான மனுக்கள் | U/s. 311 Cr.P.C Petition filed and allowed in M.P. No. 06/2026, dated: 25.05.2026 |
| 21. | எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 70(2) Crpc/ 72(2) BNSS பிரிவின் படியான மனுக்கள் | இல்லை |

| | | |
|---|---|---|
| 22. | அரசு தரப்பு வழக்கறிஞர் | திருமதி. N. கார்த்திகா பிரியதர்ஷினி |
| 23. | எதிரி தரப்பு வழக்கறிஞர் | திரு. K. ரமேஷ்கண்ணன் |
| 24. | எதிரியின் கூற்று | எதிரி குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார் |
| 25. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | 26-05-2026 |
| 26. | வழக்கின் முடிவு குறித்து எதிரிக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | 26-05-2026 |
| 27. | நீதிபதியின் முடிவு | முடிவாக, எதிரி இதச பிரிவுகள் 279, 337, 304(A) ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரி குவிமுச பிரிவு 255(1)ன் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி சுதந்திரமாக விடுவிக்கப்படுகிறார். எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்யப்படுகிறது.<br><br>இவ்வழக்கில் தடய சொத்துகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, தடய சொத்துக்கள் குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. |

இந்த வழக்கு 19-08-2021ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு 26-05-2026ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை-1 திருமதி. N. கார்த்திகா பிரியதர்ஷினி அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K. ரமேஷ்கண்ணன், M.A., B.L., அவர்கள் ஆஜராகியும், எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை உரிய கவனத்துடன் கேட்டும், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலித்தும் இன்று **(26-05-2026)** இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.....



THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.26 19:19:15 +0530

**தீர்ப்புரை**

**அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையில் இருந்து வெளிப்படும் அரசு தரப்பு வழக்கு : –**

1. புகார்தாரராகிய திருக்கண்ணன் என்பவரும், அவரது மனைவி வள்ளி என்பவரும் கடந்த 22.04.2021ம் தேதி காலை புகார்தாரருக்கு சொந்தமான TN–65–AU–2950 என்ற பதிவெண் கொண்ட HERO SPLENDOR+ இருசக்கர வாகனத்தில் அவரது உறவினர் வீட்டு விஷேசத்திற்கு கூராங்கோட்டை முனியசாமி கோவிலுக்கு சென்றுவிட்டு புகார்தாரர் இருசக்கர வாகனத்தை ஓட்ட அவரது மனைவி வள்ளி பின்னால் உட்கார்ந்து கொண்டு ஊருக்கு வந்து கொண்டிருநத் போது வழியில் கமுதி கோட்டைமேடு தாலுகாஆபிஸ் அருகில் மாலை சுமார் 16.45 மணியளவில் அவருக்கு எதிரே வந்த TN–65–BZ–8013 என்ற HERO PLEASURE இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த எதிரியானவர் இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து புகார்தாரரின் இருசக்கர வாகனத்தில் மோதியதில் புகார்தாரருக்கு வலது கை விரல்களில் சிறுகாயத்தை ஏற்படுத்தியும், புகார்தாரரின் மனைவி கீழே விழுந்ததில் தலையின் பின்புறம் இரத்தக்காயத்தை ஏற்படுத்தி கமுதி அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்று, சிவகங்கை அரசு மருத்தவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் இறப்பை ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரி மீது இதச பிரிவுகள் 279, 337, 304(A)ன் கீழ் கமுதி காவல் நிலைய ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. குற்ற இறுதி அறிக்கையை பெற்று மேற்படி வழக்கானது நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரி பிணையில் சென்றுள்ளதால் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. எதிரி இந்நீதிமன்றத்தில்

முன்னிலையானவுடன் அரசு தரப்பு ஆவணங்களின் நகல்கள் அவருக்கு குவிமுச பிரிவு 207 ன் படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. எதிரிக்கு போதுமான கால அவகாசம் அளிக்கப்பட்ட பின்பு எதிரி மீது இதச பிரிவுகள் 279, 337, 304(A) ன் கீழான குற்றம் பற்றி வினவிய போது எதிரி குற்றத்தை மறுத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.4** சாட்சிகள் விசாரிக்கப்பட்டு **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்றுப் பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

4. **<u>அரசு தரப்பு சாட்சியங்களின் சுருக்கம்</u>**

i. அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் பிறழ்சாட்சிகளாகி சாட்சியம் அளித்துள்ளார்கள்.

ii. அசா.5 கமுதி காவல்நிலைய காவல் ஆய்வாளர் ஆவார். இவர் தனது சாட்சியத்தில் சார்பு ஆய்வாளர் திருமதி. சத்யா மற்றும் ஆய்வாளர் திரு. அன்பு பிரகாஷ் ஆகியோர்களுடன் பணியாற்றியுள்ளதால் அவர்களது கையொப்பம் நன்கு பரிட்சயம் என்று கூறி அவர்கள் சார்பாக ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாக கூறி சார்பு ஆய்வாளர் திருமதி. சத்யா அவர்கள் 22.04.2021ம் தேதி நிலைய பொறுப்பில் இருந்த போது கமுதி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த அ.சா.1யை விசாரித்து அவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று நிலையம் வந்து நிலையக் குற்ற எண். 263/2021 இதச பிரிவுகள் 279, 337ன் கீழ் வழக்கு பதிவு செய்து சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி

வரைபடம் தயார் செய்து, சம்பவ இட சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் வழக்கு சம்பவத்தில் காயம்பட்ட வள்ளி என்பவர் சிவகங்கை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி 22.04.2021ம் தேதி இறந்து விட்டதாக தகவல் கிடைத்ததால் வழக்கின் சட்டப்பிரிவுகளை 279,337 இதசவிலிருந்து இதச பிரிவுகள் 279, 337, 304(A)ஆக பிரிவு மாற்றம் செய்து அறிக்கை தயார் செய்துள்ளார் என்றும், எதிரியை 09.06.2021ம் தேதி கைது செய்து பிணையில் விடுவித்து, வழக்கு விசாரணைக்காக ஆய்வாளரின் பார்வைக்கு வைத்துள்ளார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

iii. மேலும், சார்பு ஆய்வாளர் தனது சாட்சியத்தில் ஆய்வாளர் திரு. அன்பு பிரகாஷ் அவர்கள் புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு வழக்கு ஆவணங்களை பார்வையிட்டும், பிரேத விசாரணை மேற்கொண்டு அறிக்கை தயார் செய்தும், பிரேத விசாரணைக்கு கடிதம் கொண்டு சென்ற காவலரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனங்களை பரமக்குடி மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வுக்கு உட்படுத்தி ஆய்வறிக்கைகள் பெற்றும், பிரேத பரிசோதனை செய்த மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று, காவலர் மற்றும் சார்பு ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அத்துடன் வழக்கு விசாரணை முடித்து இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

iv. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றிய சாட்சியங்கள் குறித்து குவிமுச.313(1)(ஆ) பிரிவின் படி கேள்விகள் கேட்க எதிரி சாட்சியங்களை பொய் என்றும், தனது தரப்பில் சாட்சிகள் இல்லை என்று தெரிவித்ததன் பேரில் எதிரி தரப்பில் சாட்சியம் முடிக்கப்பட்டது.



THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.26 19:19:34 +0530

5. <u>**தீர்வுக்குரிய பிரச்சனை :–**</u>

i. எதிரி மீது இதச பிரிவுகள் 279, 337, 304(A) ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபித்துள்ளதா?

ii. அவ்வாறு குற்றம் நிரூபிக்கப்பட்டிருப்பின் எதிரிக்கு கிடைக்ககூடிய தண்டனை விவரம் என்ன? என்பதே இவ்வழக்கின் தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

iii. இரு தரப்பும் வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**6. அரசு தரப்பு வழக்கினை எதிரிக்கு எதிராக நிரூபித்துள்ளதா? என்பதை முடிவு செய்ய அரசு தரப்பு சாட்சியங்களை ஆராயும் போது:–**

i. அசா.1 வழக்கின் நிகர்நிலை புகார்தாரர் ஆவார். அ.சா.1 ன் சாட்சியத்தில் இருந்து வழக்கு சம்பவத்தில் இறந்து போன வள்ளி தனது மனைவி என்றும், சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் தனக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் தானும், தனது மனைவியும் கமுதியில் இருந்து மீனாட்சிபுரத்திற்கு வந்து கொண்டிருநத் போது கமுதி தாலுகா ஆபிஸ் அருகே வேகமாக வந்த ஒரு இருசக்கர வாகனம் தனது வாகனத்தின் மீது மோதியதில் தானும், தனது மனைவியும் நிலை தடுமாறி கீழே விழுந்ததில் தனது மனைவிக்கு வலது பக்க தலையில் அடிபட்டு இரத்தபோக்கு ஏற்பட்டதாகவும், தனக்கு வலது கை விரல்களில் சிராய்ப்புக் காயம் ஏற்பட்டதாகவும், தனது மனைவியை ஆட்டோ மூலம் கமுதி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்ததாகவும், அங்கு முதலுதவி சிகிச்சை பெற்று மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு செல்லும் வழியில் தனது மனைவி இறந்து விட்டதாகவும், மீண்டும் தனது மனைவியை கமுதி அரசு மருத்துவமனைக்கு கொண்டு



THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.26 19:19:40 +0530

வந்ததாகவும், தான் மருத்துவமனையில் இருந்த போது போலீசார் தன்னிடம்ஒ ரு வெள்ளை பேப்பரில் கையொப்பம் **(அ.சா.ஆ.1)** பெற்றதாகவும், புகார் மனுவில் என்ன சங்கதிகள் உள்ளது என்று தனக்குத் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார். இவரது சாட்சியத்தை பரிசீலிக்கையில் போலீசார் தன்னிடம் ஒரு வெள்ளை பேப்பரில் கையொப்பம் பெற்றதாக கூறியுள்ள நிலையில் புகார் ஆவணம் நம்பும்படியாக இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

ii. அ.சா.2 கேள்விநிலை சாட்சிப் பட்டியலில் சேர்க்கப்பட்டவர் ஆவார். இவர் தனது சாட்சியத்தில் வழக்கு சம்பவத்தில் இறந்து போன வள்ளி தனது தாயார் என்றும், சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் வீட்டிலிருந்த போது ஊர்க்காரர் ஒருவர் போன் செய்து தனது தாயாருக்கு கமுதி தாலுகா ஆபிஸ் எதிதே விபத்து ஏற்பட்டு கமுதி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றிருப்பதாக தகவல் அளித்தார் என்றும், தான் மருத்துவமனை சென்று பார்த்த போது தனது தாயாருக்கு பின்னந்தலையில் பலத்த காயம் ஏற்பட்டு முதலுதவி சிகிச்சை அளித்து மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், தனது தாயார் மதுரை அரசு மருத்துவமனைக்கு செல்லும் வழியில் இறந்து விட்டார் என்றும், தனது தாயாருக்கு விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்று தனக்கு தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். இவர் கேள்விநிலை சாட்சியம் என்பதால் இவரது சாட்சியம் ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

iii. அசா.4 தனது சாட்சியத்தில் சார்பு ஆய்வாளர் திருமதி. சத்யா அவர்கள் கடந்த 22.04.2021 தேதியன்று 17.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த போது கமுதி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப்



THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.26 19:19:47 +0530

பெற்று மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த அ.சா.1 அளித்த புகார் வாக்குமூலத்தை **(அ.சா.ஆ.3)** பெற்று நிலையம் வந்து நிலையக் குற்ற எண்.263/2021 இதச பிரிவுகள் 279, 337 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை (**அ.சா.ஆ.4)** பதிவு செய்து அன்றே புலன்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 18.35 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர் **(அ.சா.ஆ.5)** மற்றும் மாதிரி வரைபடம் **(அ.சா.ஆ.6)** தயார் செய்துள்ளார் என்று கூறியுள்ளார். ஆனால் பார்வை மகஜர் சாட்சியாக விசாரணை செய்யப்பட்ட அ.சா.3 தனது சாட்சியத்தில் சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு வள்ளி என்பவர் இறந்து சம்மந்தமாக விசாரிக்க வேண்டும் என்று கூறி காவல்நிலையத்திற்கு வருமாறு காவல்நிலையம் சென்ற போது போலீசார் ஒரு வெள்ளைத் தாளில் கையொப்பம் பெற்றதாக சாட்சியம் அளித்துள்ளதால் போலீசார் சம்பவ இடத்தில் விசாரித்ததாக சொல்வது நம்பும்படியாக இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

iv. மேலும், அ.சா.4 ன் சாட்சியத்தில் இருந்து சார்பு ஆய்வாளர் அவர்கள் சம்பவயிட சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், 22.04.2021 ம் தேதி வழக்கில் காயம்பட்ட வள்ளி என்பவர் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டதாக தகவல் கிடைத்ததால் வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337 இதசவிலிருந்து இதச பிரிவுகள் 279, 337,304(A) ஆக பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை (அ.சா.ஆ.7) தயார் செய்துள்ளார் என்றும், சாட்சிகளின் விசாரணையில் இருந்து எதிரி குற்ற சம்பவத்தில் ஈடுபட்டது உண்மையென தெரிய வந்ததால் எதிரியை 09.06.2021 ம் தேதி கமுதி கண்ணார்பட்டி ரோட்டில் வைத்து கைது செய்து தக்க பிணையில் விடுவித்து, புலன்விசாரணைக்காக ஆய்வாளரின் பார்வைக்கு வைத்துள்ளார் என்றும்,

ஆய்வாளர் திரு. அன்புபிரகாஷ் அவர்கள் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு வழக்கு ஆவணங்களை பார்வையிட்டு வழக்கு சம்பவத்தில் இறந்து போன வள்ளி என்பவரது பிரேதத்தை பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை (**அ.சா.ஆ.8)** தயார் செய்துள்ளார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

v. மேலும், அ.சா.4 ன் சாட்சியத்தில் இருந்து ஆய்வாளர் அவர்கள் விபத்து ஏற்படுத்திய வாகனமான TN-65-BZ-8013 மற்றும் TN-65-AU-2950 என்ற எண் கொண்ட இரு சக்கர வாகனங்களை கைப்பற்றி பரமக்குடி மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்விற்கு உட்படுத்தி மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் **(அ.சா.ஆ.9 மற்றும் அ.சா.ஆ.10)** பெற்றுள்ளார் என்றும், வழக்கில் இறந்து போன வள்ளி என்பவருக்கு பிரேத பரிசோதனை செய்த மருத்துவரை விசாரித்து பிரேத பரிசோதனை அறிக்கை **(அ.சா.ஆ.11)** பெற்றுள்ளார் என்றும், பிரேத பரிசோதனை நிமித்தம் பணிக்கு அனுப்பப்பட்ட காவலர் திரு.மகேஸ்வரன் மற்றும் சார்பு ஆய்வாளர் திருமதி. சத்யா ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அத்துடன் வழக்கின் விசாரணை முடித்து 08.07.2021ம் தேதியன்று நீதிமன்றத்தில் இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

vi. மேற்படி அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை பரிசீலிக்கையில் அசா.1 விபத்து குறித்து தனக்கு தெரியாது என்று கூறியுள்ளதாலும், புகார் மனு நம்பத்தகுந்த ஆவணம் இல்லை என நீதிமன்றம் முடிவு செய்துள்ளதாலும், அ.சா.2 ன் சாட்சியம் ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளதாலும், அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து மேற்படி



THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.26 19:20:04 +0530

சாட்சியங்களின் ஆய்விலிருந்து எதிரி மீது இதச பிரிவுகள் 279, 337, 304(A) ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்வுக்குரிய பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் பதில் அளிக்கிறது.

vii. இறுதியாக, இந்நீதிமன்றம், எதிரி இதச பிரிவுகள் 279, 337, 304(A)ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து, மேற்படி எதிரியை குவிமுச பிரிவு 255(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி சுதந்திரமாக விடுவிக்கப்படுகிறார். எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்யப்படுகிறது.

viii. இவ்வழக்கில் தடய சொத்துகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, தடய சொத்துக்கள் குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் என்னால் கையொப்பமிடப்பட்டு நீதிமன்ற முத்திரை வைக்கப்பட்டு 2026ம் ஆண்டு மே திங்கள் 26ம் நாள் செவ்வாய்க்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.26 19:20:11 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி

**அரசு தரப்பு சாட்சிகள்:–**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. திருக்கண்ணன் |
| அ.சா.2 | திருமதி. மணிமேகலை |
| அ.சா.3 | திரு. பாலசுப்பிரமணி |

| | |
|---|---|
| அ.சா.4 | திரு. சதீஸ்குமார் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:–**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 22.04.2021 | புகார் மனுவிலுள்ள கையொப்பம் மட்டும் |
| அ.சா.ஆ.2 | 22.04.2021 | பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | 22.04.2021 | புகார் மனு |
| அ.சா.ஆ.4 | 22.04.2021 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | 22.04.2021 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.6 | 22.04.2021 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.7 | 22.04.2021 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |
| அ.சா.ஆ.8 | 22.04.2021 | பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ.9 | 05.05.2021 | TN–65–BZ–8013 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்திற்கு வழங்கப்பட்ட மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.10 | 05.05.2021 | TN–65–Y–7655 என்ற பதிவு எண் கொண்ட இரு சக்கர வாகனத்திற்கு வழங்கப்பட்ட மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.11 | 08.07.2021 | பிரேத பரிசோதனை அறிக்கை |

**அரசு தரப்பு சான்றுபொருள்:–** இல்லை

**எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள்:–** இல்லை

**குறிப்பு :–**

1. எதிரி வழக்கு விசாரணையின் போது பிணையில் இருந்தார்.



THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.26 19:20:23 +0530

2. சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்கப்படவில்லை.

3. தீர்ப்பு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.26 19:20:29 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.